MC. No.18/2025

நாள் 30.01.2026

ம.சா. 1:- ஜெசிமா

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு முன்னிலையானார். சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-

நான் கேணிக்கரையில் தனியாக வசித்து வருகிறேன். நான் எனது கணவரை விட்டு பிரிந்து 3 வருடம் ஆகிறது. அன்றிலிருந்து நான் கேணிக்கரையில் தான் வசித்து வருகிறேன். நான் குடும்ப வன்முறை சட்டத்தில் தாக்கல் செய்த வழக்கில் நான் வி2வி ஹாஸ்டல், விசித்ராயன் தெரு, மயிலாடுதுறையில் வசித்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எண்,407, நீடுர் விலாசம் தான் கொடுத்துள்ளேன். நான் தற்போது கேணிக்கரையில் தான் வசித்து வருகிறேன். பாத்திமா, க/பெ. சர்பூதின் எனது கணவருடைய பெரியம்மா ஆவார். அவர்கள் என் தரப்பு உறவினர் கிடையாது. நான் சொல்வது தவறு என்றும், பாத்திமா என்னுடைய பெரியம்மா என்று சொன்னால் சரியல்ல. நான் கும்பகோணத்தில், மேலகாவிரி, ஜாமியா நகரில் பிறந்தேன். நான் என் தாத்தா அரவணைப்பில் தான் வளர்ந்தேன். என்னுடைய பெரியம்மா பாத்திமா தான் என்னுடைய கணவரை வரன் பார்த்து திருமணம் முடித்தார் என்று சொன்னால் சரியல்ல. அவரை குடும்ப வன்முறை சட்ட வழக்கில் இரண்டாம் எதிர்மனுதாரராக சேர்த்தேன் என்றால் சரிதான். அவர் மீது எந்தவித முகாந்திரமும் இல்லை என்று குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.1 அவருக்கு எதிராக தாக்கல் செய்ததை தள்ளுபடி செய்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். மனுவில் 3 பத்தியில் 20 பவுன் ஆபரண நகையும், சீர்வரிசை பொருட்களும் திருமணத்தின் போது கொடுத்ததாக சொல்வது முற்றிலும் தவறு என்றும், திருமணத்தின் போது சீர்வரிசையாக எங்களது முறைப்படி ஜாகாத் முறையில் 5 பவுன் பாத்திமாவால் போடப்பட்டு, நான் அதை ஊதாறித்தனமாக அதை செலவு செய்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு இரண்டு மகள்கள் உள்ளன. இரண்டு பிள்ளைகளும் தற்போது எனது கணவர் வசம் தான் உள்ளது. 1 1/2 வருடம் முன்பு என்னிடம் இருந்த குழந்தைகளை என்னை அடித்துவிட்டு அழைத்து சென்றுவிட்டார். நான் சொல்வது தவறு என்றும், 3 ஆண்டு

CJM, MAYILADUTHURAI.

காலமாக அந்த இரண்டு குழந்தைகளும் எதிர்மனுதாரர் வசம் தான் நல்ல நிலையில் வாழ்ந்து வருகிறார்கள். நான் தற்போது Group 1 தேர்விற்கு படித்துக்கொண்டிருக்கிறேன். எனது செலவுக்காக எனது வெளிநாட்டில் இருக்கும் எனது அண்ணன் அவ்வப்போது காசு அனுப்புவார். நான் தினசரி வீட்டில் ஸ்டுசன் எடுக்கிறேன். நான் பி.சி.ஏ படித்துள்ளேன். நான் 2 வருடமாக ஸ்டுசன் எடுத்து வருகிறேன். நான் கேணிக்கரை வீட்டில் வைத்து தான் ஸ்டுசன் எடுக்கிறேன். கேணிக்கரையில் நான் மட்டும் தான் வசித்து வருகிறேன். மனுவில் போட்ட விலாசம் எனக்கு எப்படி வந்தது என்பது தெரியாது. அது எதிர்மனுதாருடைய வீட்டு விலாசம் ஆகும். நான் ஸ்டுசன் வைத்து பணம் ஈட்டி வருவதாக பட்சத்தில் அது குறித்து மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றும், உண்மையை மறைத்து மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இரண்டாம் மனுதாரர் தற்போது எதிர்மனுதாரர் பராமரிப்பில் தான் உள்ளார் என்றால் சரிதான். இந்த ஜீவனாம்சம் வழக்கு தாக்கல் செய்யும்போது இரண்டாம் மனுதாரர் எதிர்மனுதாரர் பராமரிப்பில் தான் இருந்தார் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் பராமரிப்பில் இரண்டு குழந்தைகளும் இருக்கும் பட்சத்தில் எதற்காக அவர்களுக்கும் சேர்த்து ஜீவனாம்சம் கேட்டு தாக்கல் செய்தேன் என்றால் குழந்தைகள் எனக்கு வேண்டும் என்பதற்காக அவர்களை சேர்த்து தாக்கல் செய்தேன். டி.வி.சி.11/2023 இரண்டாம் மனுதாரர் ஜாசிராவை கஸ்டடி கேட்டு நான் மனுதாக்கல் செய்து அது நிலுவையில் உள்ளது என்று சொன்னால் அது சரிதான். எனது கணவர் என்ன வேலை செய்கிறார் என்று எனக்கு தெரியுமா என்றால் ட்ராவல்ஸ் வைத்துள்ளார். எனது கணவர் ட்ராவல்ஸ் வைத்திருக்கவில்லை என்றும், அவர் தினமும் ஓட்டுநர் பணி செய்துதான் சம்பாரிக்கிறார் என்று சொன்னால் சரியல்ல. நான் என்னுடைய மனுவிற்கும் தற்போது என்னுடைய சாட்சியத்திற்கும் முரண்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர் மீது 2 முறை புகார் கொடுத்துள்ளேன். போலீசார் எங்களை அழைத்து விசாரித்தனர். நான் காவல் நிலையத்தில் விசாரித்தபோது நான் சரவணக்குமார் என்பவருடன் வாழ்ந்துக்கொண்டு இருப்பதாக ஒத்துக்கொண்டு எழுதிக்கொடுத்துள்ளேன் என்று

CJM, MAYILADUTHURAI.

சொன்னால் அது முற்றிலும் தவறு. ஜாமத்தில் பஞ்சாயத்து பேசி அதிலும் சரவணக்குமார் என்பவருடன் வாழ்ந்துக்கொண்டு இருப்பதாக ஒத்துக்கொண்டு எழுதிக்கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த சரவணக்குமாருடன் இந்து மத முறைப்படி திருக்கடையூரில் திருமணம் செய்துக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. அவர் யார் என்றே எனக்கு தெரியாது. சரவணக்குமாரின் மனைவி நிஷா தாக்கல் செய்த விவாகரத்து மனு 261/2022, டி.வி.சி.15/2023 ஆகிய வழக்கில் இந்த விவாகரத்து காரணமே நான் சரவணக்குமாருடன் வாழ்ந்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய இரண்டு குழந்தைகளையும் நான் பராமரிக்கமால் நான் அவர்களை விட்டு சென்றுவிட்டேன் என்றும், எதிர்மனுதாரர் ஓட்டுநர் பணி செய்து குழந்தைகளை நல்ல முறையில் பராமரித்து வருகிறார் என்று சொன்னால் அது சரியல்ல. மேலும், நான் சரவணக்குமாருடன் வாழ்ந்து கொண்டு, போதுமான வருமானமும் ஈட்டி வாழ்ந்து வருகிறேன் என்றும், அதனால் நான் கோரிய ஜீவனாம்சம் பெற தக்கவர் இல்லை என்று சொன்னால் சரியல்ல. குழந்தைகளை என்னுடைய பராமரிப்பில் கொடுத்தால் அவர்களுடைய எதிர்கால வாழ்க்கையே வீணாகிவிடும் என்று சொன்னால் சரியல்ல. இந்த மனுவே எவ்வித முகாந்திரமும் இல்லாமல், சரியான காரணம் இல்லாமல் தாக்கல் செய்துள்ள நிலையில் நான் எந்தவித ஜீவனாம்ச தொகையும் பெற தக்கவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் எதிர்மனுதாருக்கு கொடுத்த மனஉளைச்சல் காரணமாக அவர் மிகவும் மனதளவிலும், உடல் அளவிலும் பாதிக்கப்பட்டு, இரண்டு குழந்தைகளையும் பராமரித்து கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.

S. [signature]

<u>மறு விசாரணை :-</u>

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

[signature] 30.1.24

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

CJM, MAYILADUTHURAI.